செ.வெ.எண் :705 நாள்: 28.10.2021

**தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சி மற்றும் அதிராம்பட்டினம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதிகளில் சிறப்பு தூய்மைப் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சி, அதிராம்பட்டினம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.10.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:-

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள 32 வார்டுகளில் சிறப்பு தூய்மை பணிகளுக்காக, 120 பணியாளர்கள், 2 டிப்பர் லாரிகள், 6 சிறிய வாகனங்கள், ஜேசிபி உள்ளிட்ட வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பட்டுக்கோட்டை நகர் முழுவதும், இந்த சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டத்தின் மூலம், நகராட்சி முழுவதும் தூய்மைப்படுத்தும் திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. வார்டு-18 , கோத்தகிரி சாலை பகுதியில் வடிகால் வாய்க்கால்களை தூர்வாரும் பணியினையும், சமூக நலன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் 20 லிட்டர் ரூ. 7ரூபாய்க்கும், 1 லிட்டர் ரூ.1 ரூபாய்க்கு பொதுமக்களுக்கு வழங்கப்படும் பணிகளையும், வார்டு- 19 , அறந்தாங்கி சாலை பகுதியில் வடிகால் கால்வாய் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் அதிராம்பட்டினம் தேர்வுநிலை பேரூராட்சி சார்பில் வார்டு-8 கடற்கரைப் சாலை / வார்டு-10 ஹாஜா நகர் , வார்டு - 11 முத்தம்மாள் சாலை, வார்டு- 15 ஜாவியால் சாலை பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் மூலம் வடிகால் கால்வாய் தூர்வாரும் பணிகளையும், குடிநீர் வசதிகள், தெருவிளக்குகள் போன்ற வளர்ச்சித் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப் பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இவ்ஆய்வின்போது பட்டுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.பாலச்சந்தர் இ.ஆ.ப., பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் திரு. வீர முத்துக்குமார், உதவி இயக்குனர் (பேரூராட்சிகள்) திரு. மாகின் அபூபக்கர், வட்டாட்சியர் திரு. கணேஸ்வரன், செயல் அலுவலர் திரு.மணிமொழியன், நகராட்சி கட்டிட ஆய்வாளர் திரு. கருப்பையன், சுகாதார ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன், ஆரோக்கியசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**